# அவள் ஆசை

எழுதி முடித்திருந்த கடிதத்தைக் கவரில் போட்டு ஒட்ட வேண்டியதுதான் எஞ்சி நின்ற வேலை.

"அப்பா! கவர் வேணும்!" என்று கேட்டாள் லலிதா.

"வைத்திரு கடிதத்தை! இங்கே கவரில் நானும் மாப்பிள்ளைக்கு ஒரு கடிதம் வைத்து தருகிறேன்! பத்தே நிமிஷம்!" என்றார் அவள் தந்தை. லலிதா 'ஊம்' கொட்டிவிட்டு, அவர் பேச்சிற்குச் சம்மதங் கூறுவிட்டு, தான் எழுதியிருந்த கடிதத்தைப் பத்திரமாக வைத்துவிட்டு, கட்டிலில் வந்து படுத்தாள்.

எழுதி முடித்திருந்த கடிதத்தைப் பற்றியே யோசனை. இன்னும் தபாலுக்குப் புறப்படவில்லை கடிதம். கவரில் கூடப் பொருத்தவில்லை இன்னும் அதை. யோசனைக்கு உரிமையும் இடமும் உண்டல்லவா? அச்சில் ஏறாத, பத்திரிகைக் காரியாலயத்துக்கே புறப்படாத, எழுத்துப் பிரதிக்கு மாறுதல்களை ஏற்க எத்தனை உரிமையும் அவகாசமும் உண்டோ, அத்தனை உரிமை கூடவா இருக்காது அவள் கடிதத்திற்கு?

உண்டு, நிறைய உண்டு. அவளுடைய யோசனைகளுக்குப் பலனும் கிடைக்கக்கூடும்!

என்ன எழுதியிருக்கிறாள் கணவருக்கு?

என்ன எழுதவேணுமோ, என்னத்தை அவனிடம் சொல்ல வேண்டும்போல தோன்றியதோ, அதை எழுதியிருக்கிறாள்! மாறுதல் இருக்கணும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால் கடிதம் எழுத ஆரம்பிப்பதற்கு முன் அவள் நினைத்த ஒரு விஷயத்தை - அவள் எழுதவில்லை; வேண்டாமென்றுதான் அதைத் தவிர்த்துவிட்டாள் - அந்த செயலை.

புது வருஷம் வருகிறது! அவருக்கு ஒரு 'புத்தாண்டுச் செய்தி' அனுப்பணும் என்று விரும்பினாள் அவள். ஆனால் உடனே ஏனோ அந்த எண்ணம் சப்புத்தட்டியது.

'போதும், எனக்கென்ன இந்தப் பவிஷும் பெருமையும்!" என்று தோன்றிவிட்டது! அந்த எண்ணத்தை அகலவிட்டாள். சப்புக்கட்டினாலும், அதன் பயனாகவே எழுந்தன சில தீவிரமான உணர்ச்சிகள்! தன் அலுப்பு சலிப்புகளை அவர் அறியட்டுமே! கடிதம் உருவாயிற்று. எழுதிவைத்திருக்கிறாள்.

"இந்த நெடுங்கடிதம் எழுதும் உத்தேசம் எனக்கு இன்று இருக்கவில்லை! ஒரு "புத்தாண்டுச் செய்தி" அனுப்ப நினைத்தேன். ஆனால் ஒரோரு 'புத்தாண்டுச் செய்தி' அனுப்ப நினைத்தேன். ஆனால் ஒரொரு 'புத்தாண்டுச் செய்தி'யும் கண்ட பலன்தான், ஓரோரு புதுவருஷமும் கண்ட பலன்தான் இதுவும் காணலாம் என்ற சலிப்பில் அந்த எண்ணம் விட்டுவிட்டேன். இரண்டு நாளுக்கு முன்புதான் உங்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். அதனால் இந்தக் கடிதம் நீங்கள் எதிர்பாராததாயிருக்கும். என் கடிதங்கள் மகிழ்ச்சியே உங்களுக்கு அளிக்கும் என்ற நம்பிக்கையில், இந்தக் கடிதம் புத்தாண்டின் துவக்கத்தில் உங்களுக்கு எதிர்பாராத மகிழ்ச்சியளிக்கட்டும் என்று எழுதினேன்."

இப்படித்தான் ஒளிவு மறைவு இன்றி கணவனுக்குத் தன் உள்ளக்கிடக்கையை வெளியிடவும் வெளியிட்டிருந்தாள் லலிதா. நேர்மையான பேச்சு, ஒரு மறைவும் இல்லை. இப்படித்தான் இருக்க வேண்டும் தம்பதிகளிடையே கடிதம் . . .

ஆனால் இந்தக் கடைசிப் பகுதியின் மேல்தான் லலிதாவின் கவனம் பிணைந்துவிட்டது.

'இப்படி எழுதலாமா?'

"எதிர்பாராத மகிழ்ச்சி முதலில் உண்டாகலாம். ஆனால் கடிதத்தைப் படித்து முடித்ததும் மனம் கனக்கும். 'ஒரோரு வருஷமும் கண்ட பலன்தான் காணலாம்' என்ற வாக்கியம் உறுத்தும் மனதில்; நோகும் அவர் நெஞ்சு" என்று தோன்றியது.

'இப்படி எழுதவேண்டாம்' என்று எண்ணினாள். ஆனால் கசப்பு உணர்ச்சி, வாழ்க்கையின் வறட்சியினால் ஏற்பட்ட உணர்வு, 'உண்மையைச் சொன்னால் என்ன?' என்றது!

அப்பா எழுதியிருப்பார் தம் எழுதவேண்டிய கடிதத்தை - வந்துவிடும் அது கவருடன்; இப்போது தன் கடிதத்தில் எதற்கு மாற்றம் செய்வது? ஏன் செய்ய வேண்டும்!

கடிதத்தை மாற்றி எழுதும் நினைப்பை உதறிவிடுபவள் போல சலனமற்று யோசனையுடனே படுத்திருந்தவள், ஒரு திரும்புத் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

புது வருஷம் வரப்போகிறது! இந்த வருஷமாவது தன் வாழ்க்கையில் ஜீவனைக் கொணருமா? 'கொணரட்டும்' என்று வெளிப்படையாகச் சொல்லவில்லை, புத்தாண்டுச் செய்தி கூறவில்லை. ஆனால் மானஸீகமாகக் குமிழிட்டுக் கொண்டிருந்த இந்த விருப்பு, அவளுக்கும் அவள் கணவனுக்கும் எப்போதும் வாழ்த்துக் கூறிக்கொண்டு தானே இருக்கிறது!

இந்தப் புதுவருஷத்திலாவது வருமா சுகம், அமைதி, மனச்சாந்தி?

'புது வருஷம்! . . . ஆம், இந்தப் புது வருஷம்தான் புது வாழ்வு கொணர வேணும்!

'புது வருஷம் கட்டாயம் புதுமையும், புதுவாழ்வும் எனக்குக் கொண்டுவரத்தான் போகிறது! என் கடிதத்திற்கு வரும் பதிற்கடிதத்திலேயே நற்செய்தி வரலாம்! இதோ, இந்தப் பாழும் பழைய வருஷத்தின் கடைசியில் நான் எழுதியுள்ள இந்தக் கடிதமே என் மனக்குமுறலைத் தாங்கும் இறுதிக் கடிதம்!" என்று தோன்றியது அவளுக்கு. மனசுக்கு ஒத்தடம் கொடுக்கப்பட்டது போல இருந்தது. ஆறுதலாக இருந்தது; கண்கள் லேசாக மூடின.

அவசியமான எரு கிடைத்ததும் செழிப்பு கொள்ளும் செடிபோல, அவளுக்கு அப்போது அவசியமாயிருந்த சிறு ஆறுதல் கிடைத்ததும், அவள் யோசனையும் கற்பனையாகச் செழிப்பு வாய்க்கப் பெற்றது.

அவள் எதிர்பார்த்தபடியே கடிதம் போய்ச் சேருகிறது - சேர்ந்தது வாசுவிடம் - ஜனவரி ஒன்றாம் தேதி காலையில். கடிதம் எழுதுகையில் அவளுக்குண்டான உணர்வு போன்றதே - இன்பமும் துன்பமும் இழைத்த உணர்ச்சியே - அவனுக்கும் உண்டாயிற்று. இந்த உணர்ச்சியை விவரிக்க முடியுமா? முடியாது. கணக்குப் பாடத்தில், 'இப்படிப் போட்டால் விடை!' என்று சொல்லிவிடுவதுபோல, 'எகனாமிக்ஸ்' பாடத்தில் சொல்லிவிட முடியுமா? சொல்லித்தர முடியுமா? கால மாறுதல்களையும், மனநிலைகளையும், ஒட்டி ஒட்டிச் சொல்ல வேண்டும்.

உடல் உறுப்புகளைப் பிரித்து அறுத்து விவரிக்கலாம். உள்ளத்தை விவரித்துவிட முடியாது. இந்த மாதிரிதான் அவள் உணர்ந்தாள், அவனும் உணர்ந்தான். வாசு தன் மனசை எழுதுவானானால் இப்படியேதான் எழுதுவான். அவன் 'எகனாமிக்ஸ்' படித்தவன், மாமனார், 'கணக்கு'ப் பேர்வழி.

கடிதத்தைப் படித்தான் வாசு; அதைக் கையில் வைத்தபடியே முறுவலித்தான். அந்த முறுவலிடையே முறுக்கப்பட்டுக் கிடந்தது வருத்தத்தின் சாயை. திருப்பி திருப்பிப் படித்தான் கடிதத்தை. அதைப் படித்து முடித்துப் பெட்டியில் போட்டுவிட்டு, மேஜையருகே வந்தான். காகிதத்தாள், பேனா சகிதம் உட்கார்ந்தான் அதனருகே. கடிதம் அவளுக்குத்தான்.

"புது வருஷத்தில் உனக்கு நான் எழுதும் கடிதமும் இனிமையானதாக, வருத்தமற்றதாக இருக்க வேண்டுமல்லவா? அதனால் உன் கடிதம் எனக்களித்த மகிழ்ச்சியையே நான் எடுத்துக்கூற விரும்புகிறேன் முதலில்....

'புத்தாண்டுச் செய்தியும்!' 'வாழ்த்தும்' நம்மிடையே அவசியமா? நம் மனங்கள், அந்தரங்க உணர்ச்சிகள் நாடும் விஷயத்தை, நாடும் இன்ப வாழ்க்கையை நாமிருவரும் வெளிப்படக் கூறிக்கொள்ள வேண்டாமல்லவா. நாமும் அறிவோம். கடவுளும் அறிவார் அன்றோ!

இதோ . . கடிதத்தில் நான் சொல்ல வேண்டிய, வருத்தம் தரக்கூடிய விஷயமும் இருக்கிறது - அதையும் ஒளிக்காமல் உன்னிடம் சொல்லிவிடுகிறேன். புது வருஷத்தில், நான் உன்னிடமிருந்து என் அந்தரங்கத்தை மறைக்கவும் கூடாது அல்லவா?

நான் ஒரு நிலைப்படாததால்தான் உனக்கு வருத்தம், துன்பம், அலுப்பு, சலிப்பு. ஓரோரு வேலை அப்ளிகேஷன் போடவும் நான் மீன மேஷம் பார்க்க வேண்டிய நிலைமையில் இருப்பதால், ஓரோர் இண்டர்வ்யூக்கும் சகுனம் பார்த்து அனுப்பப்படும் நிலைமையில் நான் இருப்பதால் உனக்கும், 'ஓரோர் புதுவருஷமும் கண்ட பலன் என்ன?' என்ற அலுப்பு. பாவம், நீயும் ஓரோரு புதுவருஷமும் புது வாழ்வு எதிர்நோக்கி நிற்கிறாய். நைப்பாசையால், தமிழ்ப் புது வருஷம் வந்தால், அதைப் பேராவலோடு வரவேற்கிறாய்! 'நல்லாண்டாக விளங்கட்டும்!' என்று சொல்கிறாய்! தமிழ் வருஷம் முடிவதற்குள் ஆங்கிலப் புது வருஷம் பிறக்கிறது. "அதன் வரவு நல்வரவாகுக" என விரும்புகிறாய்! ஆங்கில வருஷம் முடிவதற்குள் - தமிழ்ப் புத்தாண்டு. இந்த ஒன்றரை வருஷங்களுள் நீ மூன்று 'புத்தாண்டுச் செய்திகள்' அனுப்பியிருக்கிறாய் பாவம்! உன்னைப் பற்றி நினைத்தால் பரிதாபமாயிருக்கிறது எனக்கு! இப்போது நீ புத்தாண்டுச் செய்தி அனுப்புவாய் என்றே எதிர்பார்த்தேன். அடுத்தாற்போல வரவிருக்கும் 'விரோதி' நாம ஸம்வத்ஸரத்திற்குள்ளாகவாவது 'புத்தாண்டுச் செய்தி'

வரவைத் தவிர்க்க வேண்டும், எனக்கு வேலை கிடைத்துவிட வேண்டும் என்று எண்ணினேன். ஆனால் நீ இந்த ஆங்கில வருடத்திற்கே 'புத்தாண்டுச் செய்தி'யை நிறுத்திவிட்டாய்! இது எனக்கு ஒரு நம்பிக்கையளிக்கிறது! 'இனி உண்மையிலேயே நமக்கு இன்ப வாழ்வு உண்டு என்றுதான் சூசிக்கிறதோ இந்த 'நிறுத்தம்'?' என்று தோன்றுகிறது.

உனக்கும் தென்பு வரட்டும். இப்பொழுதே எனக்கு ஒரு எண்ணம் தலை தூக்குகிறது. 'வேலை கிடைத்து நிலைக்கு முன் கல்யாணம் செய்து கொண்டது தவறோ?" என்று! இந்த என் எண்ணம் உன் தென்பினால், உன் சந்தோஷத்தினால், அகலட்டும்! புது வருஷம் இனிதாய் விளங்கட்டும் நமக்கு!"

விறுவிறுவென்று எழுதி முடித்த கடிதத்தை, கவரில் இட்டு, ஒட்டிப் போட்டான் வாசு, லலிதாவின் விலாசமிட்டான்.

"அம்மா, லலிதா? கவர்மேல் நீயே விலாசம் எழுது!.... ஒட்டு நன்றாய்! இந்தா!"

யோசனைக்குவியலில் மூழ்கி எழுந்த லலிதா, விசாசதாரரிடம் சேரும் 'ரிஜிஸ்தர்' கடிதம் போல விறைப்பாக தென்பட்டாள்.

"தாங்கோ" என்றாள். பெற்றுக்கொண்டாள் கவரை அப்பாவிடமிருந்து.

உள்ளே போய் மேஜையிடம் அமர்ந்த லலிதா லேசில் எழுந்து வராதது கண்டு, அறையுள் எட்டிப் பார்த்தார் தந்தை. என்னமோ எழுதிக்கொண்டிருந்தாள் லலிதா.

"என்னம்மா - நீ இப்பவா எழுதறே! எழுதியாகல்லே?"

"முதல்லே எழுதினேன் - ஆனால் அதிலே ஒரு விஷயம் மறந்துட்டேன் - இப்போ எழுதறேன்-"

"சரி" என்று போய்விட்டார் தந்தை.

அவர் தன் பேச்சில் 'உண்மை தொனிக்கவில்லை' என்று அறிந்தேயிருப்பார் என்று தோன்றியது லலிதாவுக்கு.

எனினும் எழுதினாள்.

அவள் எழுதியது வெகு சொற்பம், ஆனால் புதுக்கடிதம். எதிரே கிடந்தன கலர் பென்ஸில்கள். அவைகள் லலிதாவின் கையில் ஏறி வரைந்த மூவர்ண தேசியக் கொடி, காகிதத்தின் மேற்பகுதியில். கொடியின் நிழலில், பொற்கோலின் அண்மையில் சில வார்த்தைகள், இதுவே கடிதம்.

"இந்தப் புது வருஷமேனும் நமக்கு இன்பம் கொணரட்டும்!" என்ற வாக்கியம்தான் - வார்த்தைகளின் சேர்க்கை!

"ஆங்கிலப் புது வருஷம் கொண்டாட வேண்டாம் என்றுதான் எண்ணம்! ஆனால் என் மனம் வருஷத்தில் இரண்டு புது வருஷங்களின் வரவை விரும்புவதில் உங்கள் மனம் வேடிக்கை நுகராதா? அதற்காகத்தான் ஆங்கிலப் புத்தாண்டை, தேசியக் கொடியால் பெருமைப்படுத்துகிறேன், என் மனசுக்கும் அமைதி நாடுகிறேன்1" என்று கணவருக்கு மறுநாள் 'சாதா'க் கடிதம் விடுக்க எண்ணம் லலிதாவுக்கு. 'எதிர்பாராத மகிழ்ச்சியாக'ப் போய்ப் பிறகு சோகச் சாயை கொடுக்கும் முதலில் எழுதிய கடிதத்தை அனுப்ப மனமில்லை! புது வருஷத்தில் தன் 'பழைய வழக்கம்' அளிக்கக்கூடிய குறுகுறுப்பே இருக்கட்டும - தான் கற்பனையில் அவன் கடிதத்தில் வந்ததாகக் கண்ட வேடிக்கை வியாக்கியானம், உண்மையாக வரட்டும் - என்றும் ஆசை!

புது வருஷத்தில் பிரும்மாண்டமானதொரு ஆசையை எதிர்பார்த்த அவளுக்கு இந்த நைப்பாசையும் தோன்றியது!

"உலகிலே இன்பம் கிடையாது!" என்பது ஒரு வேதாந்தம். "உலகின் ஒவ்வொரு அம்சத்திலும் பொருளிலும் உண்டு இன்பம்!" என்பது ஒரு சித்தாந்தம்!

இரண்டும் அவளிடம் குடிகொண்டிருந்தன, குட்டிக் கடிதத்தைத் தபாற் கவரில் இட்டபோது!

**********

(சுதேசமித்திரன், ஜனவரி 23,1948)